# சைதாப்பேட்டையில் சுரங்கப் பாதை திறப்பு




புதிதாகத் திறக்கப்பட்ட சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் சுரங்க நடைபாதையின் நுழைவாயில்.

**சென்னை, ஜூன் 29:** சென்னை சைதாப்பேட்டையில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக புதிய சுரங்கப் பாதை திறக்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை திறந்தவெளி பல்கலைக் கழகம் அருகில் சுரங்கப் பாதைக்காக புதிய கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிக்காக, இங்கிருந்த கட்டடம் அகற்றப்பட்டது.

அப்பணிகள் நிறைவடைந்ததை அடுத்து தற்போது, இங்கு புதிய சுரங்கப் பாதை கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டையில் நெரிசல் மிகுந்த நேரங்களில், இந்த சுரங்கப் பாதையை பாதசாரிகள், மெட்ரோ ரயில் பயணிகள், மாநகரப் பேருந்துக்குச் செல்வோர் பயன்படுத்த முடியும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.